கிறது. இதிலே சட்டத்திற்குப் புறம்பான நிலையில் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தால், அதைப் பற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது. காலத் தாழ்வு ஏற்படும் சூழ்நிலை ஏற்படுமானால் அதைத் தவிர்ப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது. ஆகவே, இதற்குமேல் இது குறித்து விவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

4. கவன ஈர்ப்புகள்.

(அ) திருநெல்வேலி, இராமநாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், என். பழனிவேல், டி. மணி, இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர்அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, 'திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால், தொழிலாளர்கள் வேலையின்றி இருப்பது குறித்து' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979–80ஆம் ஆண்டில் மதுரை பகுதி சுங்க வரி இலாகாவின் கணக்குப்படி குமரி, நெல்லை, முகவை, திருச்சி, மதுரை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் குரோஸ் ஒன்றுக்கு ரூ. 4·50 கலால் வரி செலுத்தும் தீப்பெட்டி தொழிற்சாலைகள் 499 ஆகவும், குரோஸ் ஒன்றுக்கு ரூ. 1·60 கலால் வரி செலுத்தும் பாக்டரிகள் 6,139 ஆகவும் இருந்தன. இவைகளில் ரூ. 4·50 வரி செலுத்தும் 49 பாக்டரிகளும் ரூ. 1·60 வரி செலுத்தும் 1,900 பாக்டரிகளும் 1979–80ம்

ஆண்டில் வேலை செய்யவில்லை. மற்றைய பாக்டரிகள் ஒரு ஆண்டில் உற்பத்தி செய்த தீப்பெட்டியின் அளவு 1,58,07,515 பண்டல்கள். ஆக மாத சராசரி உற்பத்தி 13,17,293 பண்டல்கள் ஆகும்.

விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும் பண்டல்கள் 5 இலட்சம் எனக் கூறுவது மாத சராசரி உற்பத்தியில் பாதி கூட இல்லை. வியாபாரத்தில் இந்த இருப்பை ஒரு தேக்கம் எனக் கூற முடியாது. மேலும் தீப்பெட்டி பண்டல்கள் தேக்கத்தால் தொழிற்சாலை கள் மூடப்பட்டிருக்கின்றன என்பன போன்ற செய்தி அரசுக்குக் கிடையாது. அப்படி எந்த ஒரு தொழிற்சாலையும் மூடியிருப்ப தாகவும் தெரியவில்லை. இந்நிலையில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளார்கள் எனக் குறிப்பிட்டிருப் பதும் பொருந்தாத ஒன்றாக உள்ளது.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர் களே, அமைச்சரவர்களுடைய விளக்கத்திலே உண்மைக்கு மாறுபட்ட சில தகவல்களைத் தந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை ஏற்கனவே கொடுக்கும்போது 5 இலட்சம் குரோஸ் தேக்கம் இருந்தது. சிலவற்றை மூடிவிட்டோம், சிலவற்றை மூட வேண்டிய நிலை இருக்கிறது என்று அந்தச் சங்கத்தினர் கூறினார்கள். அந்தச் சங்கத்தின் தலைவர் அர்ஜுனராஜன் அவர்கள் சமீபத்தில் ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள், அரசுக்கும் அது பற்றி கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ரேடியேகுலும் அறிவிப்பு வந்திருக்கிறது. கிட்டத்தட்ட 2 கோடி குரோஸ் தேக்கம் இருந்திருக்கிறது. ஆகவே, இப்போதுள்ள ஒன்றிரண்டு தொழிற்சாலைகள் மட்டுமல்ல, எல்லாத் தொழிற் சாலைகளையும் மூட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சில வரிகளைத் தள்ளுபடி செய்வதன் மூலம் அல்லது வரி விலக்குக் கொடுப்பதன் மூலம்தான் இந்தத் தொழிலை நடத்த முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? வரவில்லை என்றாலும் இப்போது நான் தந்திருக்கிற தகவலின் அடிப்படையில் அந்தத் தேக்கத்தைப் போக்கி, தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு, எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, தற்போது கூட்டுறவு தீப்பெட்டி உற்பத்திக் கூடங்கள் எதுவும் மூடப்படவில்லை என்றும், இன்றைக்கு மூடப்பட்டிருக்கும் சில நிறுவனங்கள் அனைத்தும் தனியாருக்குச் சொந்தமான நிறுவனங் கள் என்றும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்

களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அப்படி தனியார்களுடைய நிறுவனங்களிலே தேங்கிக் கிடக்கிற தீப்பெட்டிகளைக் கூட விற்பனை செய்ய அரசு உதவி செய்யத் தயாராக இருக்கிறது. ஆனால் அந்த தனியார் நிறுவனங்கள் எல்லாம் கூட்டுறவுத் துறையின் கீழ் வந்து பதிவு செய்து, பின்னர் அரசாங்கத்திடம் ஒத்துழைப்பு, உதவி கேட்டால் நிச்சயமாக அத்தகைய உதவிகளைச் செய்ய, போதுமான நடவடிக்கைகளை எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, தமிழகத்திலே மிகப் பெரிய தொழிற்சாலையாக இருப்பது 'விம்கோ' தொழிற்சாலை. அதனால் கிராமப்புறங்களில் இருக்கிற குடிசைத் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன. இந்த பாதிப்பு ஏற்படாமல் இருக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, ஏற்கனவே மத்திய அரசு விம்கோ போன்ற நிறுவனங்களுக்கு ரூ. 7·20 என்ற வகையில் கலால் வரி விதித்துள்ளது. அதே நேரத்தில் இப்படிப்பட்ட கூட்டுறவுத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு குறைந்த விகிதத்தில் கலால் வரி விதித்து பாதுகாப்பு நல்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) விருதாசல நகராட்சி கால்நடைச் சந்தையில் அதிகக் கட்டணம் வசூலித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஆர். தியாகராசன், கே. நாராயணசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவரவர்களே, "விருதாசலம் நகராட்சி மாட்டுச் சந்தையில் குத்தகைதாரர்கள், கால்நடைகளுக்கு அதிகக் கட்டணம் வசூலிப்பதால் அங்குள்ள விவசாயிகளிடம் நிலவும் கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS